[20th January 1961

Headmasters for Elementary Schools.

* 7 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹையர் கிரேடு தலைமை ஆசிரியர்களை ஆரம்பப் பள்ளி களில் நியமிப்பதற்கு பதிலாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்க உத்தரவிடப்பட்டதா ?

(இ) இதனால் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பலர் பாதிக்கப் பட்டனரா ?

(உ) இத்தகைய நிலையில் இந்த ஆண்டும் தொடர்ந்து ஆசிரி யர் பயிற்சிக்கு ஹையர் கிரேடு ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கப் போகும் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Till 1939 Higher Elementary Grade teachers could be appointed as headmasters of Lower Elementary Schools. In that year the rules were amended to the effect that only Secondary Grade teachers should be headmasters of schools with more than four teachers. Higher Elementary grade teachers appointed as headmasters before 1939 could however be retained in service as headmasters. There has been no recent order in the matter.

(இ) No, Sir.

(உ) Candidates are admitted for higher elementary grade training as these teachers are required for normal replacement and for the new schools and additional classes in existing schools to be opened every year for the expansion of facilities for Primary Education.

MR. SPEAKER : இன்னொரு கனம் அங்கத்தினருக்குப் பதிலாக யாராவது ஒரு அங்கத்தினர் கேள்வி போடவேண்டுமானால், "நான் அவருக்குப் பதிலாகக் கேள்வி போடுகிறேன்" என்று தயவு செய்து எழுந்து நின்று சொல்லவேண்டும். கையை உயர்த்தினால் மாத்திரம் போதாது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்கள் கையை உயர்த்தினார். ஆதலால் அவருக்கு நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Bridge across Valavanar

* 8 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலூகாவில் வளவனாற்றில் கோஸ்டல் ரோட்டில் (Coastal road) கட்டப்பட வேண்டிய பாலம் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன் உரிமை (Priority)

20th January 1961]

பெற்றிருந்தும் இதுவரை நடவடிக்கை ஏதும் எடுத்துக் கொள்ளாததேன் ?

(இ) எப்போது இந்த வேலை துவக்கப்படும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) : The estimate for constructing a bridge across Valavanar at mile 6/7 of Gopalasamudram-Voimedu road has been finalised and it is under scrutiny. Sanction will be accorded to the estimate, and the work will be taken up for execution soon.

SRI A. VEDARATHNAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முதல் உரிமை வழங்கப்பட்டிருந்தும் இவ்வளவு கால தாமதம் ஆனதற்கு ஏதாவது காரணம் சொல்ல முடியுமா ? அதற்கு எஸ்டிமேட் தொகை எவ்வளவு ? இந்த வேலை எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதற்குக் காரணம் இப்போது சொல்வதற்கில்லை. எஸ்டிமேட் எழுபதாயிரம் ரூபாய். வெகு துரிதமாக அந்த வேலை துவங்கப்படும் என்று சொல்லியிருக்கிறது.

Aid to Herbalists

*9 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூலிகை வைத்தியம் செய்பவர்களுக்கு உதவி அளிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார். . . .

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் "நோ" என்று சொல்கிறபோது தாங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் ?

SRI S. M. ANNAMALAI : கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட மூலிகையைப் பயன்படுத்தி சில வைத்தியர்கள் நோய்களைத் தீர்க்கிறார்கள். அந்த மூலிகை வைத்தியர்களுக்கு உதவி செய்யவாவது சர்க்கார் முன்வரக்கூடாதா ? அப்படி உதவி செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மூலிகைகளை நன்றாக வளர்ப்பதற்கு இந்திய மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருக்கிறோம். மற்ற இடங்களிலும் வளர்ப்பதற்கு இடம் இருக்கிறது.